# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 112/பேரூ/2023**
**நாள் : 03.07.2023**

திரு. K. வடிவேலு,
சேலம் மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
சங்ககிரி பேரூராட்சி,
சேலம் மாவட்டம். .... எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், சங்ககரி வட்டம், கன்னந்தேரி அஞ்சல், 8/231/1 பொந்தனூர் காட்டுவளவு என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. வடிவேலு என்பவரது 27.04.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.05.2023 அன்று பெறப்பட்டு, 112/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கன்னந்தேரி அஞ்சல், 8/231/1 பொந்தனூர் காட்டுவளவு என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. வடிவேலு என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" சங்ககிரி தேர்வு நிலை பேரூராட்சி 10வது வார்டு பால்வாய் சர்வே எண் 257/3L1A9Aல் இருக்கும் அடுக்குமாடி குடியிருப்பின் தரை தளம் 1990.63 சதுரடியும் முதல் தளம் 1990.63 சதுரடியும் கட்டிக் கொள்ள திரு. தீனதயாளன் மற்றும் திருமதி இந்திரா என்பவருக்கு 28.4.2015 தேதியில் அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டுள்ளதென்றும் பின்னர் அதே அடுக்குமாடி குடியிருப்பின் இரண்டாம் தளம் 1990.63 சதுர அடியில் கட்டிக்கொள்ள 12.09.2015ல் அனுமதி வழங்கபட்டுள்ளது என்றும், மேற்படி மனையில் 2866.5 சதுரடி மனை நிலம் அதில் கட்டப்பட்டுள்ள கிழமேல் இருபுறமும் 17 அடி தென்வடல் இருபுறமும் 70 அடி ஆக இந்த வகை அளவுள்ள 2590 சதுர அடிகள்

(240.61 ச மீ) கொண்ட (கீழ்தளம்) ஆர்.சி.சி கட்டிடம் (2) மேற்படி அதே அளவு கொண்ட 2590 சதுர அடி (240.61) அளவு கொண்ட (தரை தளம்) ஆர்.சி.சி.கட்டிடம் (3) அதே அளவு கொண்ட 2590 சதுர அடி (240.61 ச.மீ) அளவுள்ள (முதல் தளம்) ஆர்.சி.சி கட்டிடம் (4) மேற்படி முதல் தளம் ஆர்.சி.சி. கட்டிடத்தின் மேல் கிழே மேல் இருபுறமும் 32.5 அடி தென்வடல் 24 அடி ஆக இந்த வகை அளவில் 780 சதுர அடிகள் (72.46 ச மீ) அளவுள்ள மேல்தளத்தில் இரண்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மேலும் தரைதளத்தில் மூன்று வீடுகளும் முதல் தளத்தில் ஆறு வீடுகள் உள்ளது. அந்த அடுக்குமாடி குடியிருப்பில் மொத்தம் (11) பதினொன்று வீடுகள் உள்ளது. மேற்படி அந்த அடுக்குமாடி குடியிருப்பை கடந்த 01.06.2022ந் தேதி திரு.C.பூபாலன் த/பெ சென்னகிருஷ்ணன் என்பவர் கிரையம் பெற்றுள்ளார். பின்னர் அவரது சகோதரி ஹேமலதாவிற்கு கடந்த 06.10.2022 தேதியில்தான் செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார், மேற்படி அந்த அடுக்குமாடி குடியிருப்பு அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதாகவும் அதில் பதினோறு வீடுகள் உள்ளதாகவும் பாதுகாப்பு நலன் சார்ந்த விதிமுறைகள் கடைபிடிக்காமல் மேற்படி பதினோறு வீட்டையும் வாடகைக்கு விடப்பட்டுள்ளதாக மனுதாரராகிய நான் கடந்த 10.09.2022, 17.10.2022 மற்றும் 29.10.2022 ஆகிய தேதிகளில் பேரூராட்சி உதவி இயக்குநர், சேலம் அவர்களுக்கு புகார் மனு அளித்தேன் என்பதை குறிப்பிட்டு சங்ககிரி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி அடுக்குமாடி குடியிருப்பு வீட்டின் உரிமையாளர் C. ஹேமலதாவிற்கு வழங்கிய 24.11.2022 தேதியிட்ட நகராட்சிகள் சட்ட அறிவிப்பில் (ந.க.எண் 551/2022 நாள் 24.11.2022) மூன்றாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு வீடுகள் மட்டும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதாகவும் அதனை இடித்து ஏன் அப்புறபடுத்தகூடாது என்று தனது 24.11.2022 தேதியிட்ட நகராட்சிகள் சட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்த அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள மொத்த தளங்களும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது என்று தெளிவாக அறிந்திருந்தும் அந்த மூன்று தளங்களின் பேரில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளருக்கு சாதகமாக செயல்பட்டு வருகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அனுமதிக்கு எதிராக உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் சுமார் பதினோறு குடும்பங்கள் குடியிருந்து வருகிறார்கள் அந்த அடுக்குமாடி குடியிருப்பு, அனுமதிக்கு எதிராக உள்ளதால் சுற்று சூழல் பாதிப்புக்குள்ளாகிறது. அந்த அடுக்குமாடி குடியிருப்பின் அடி சுவர் மற்றும் அதன் உறுதி தன்மை கேள்விக்குறியாகியுள்ளது. எனவே கனம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் பொது நலன் கருதியும் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் பதினோறு குடும்பங்களின் நலன் கருதியும் சங்ககிரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை விசாரித்து அந்த அடுக்குமாடி குடியிருப்பை முறையாக அளவீடு செய்தும் விசாரணை அடிப்படையிலும் அளவீடு செய்த அடிப்படையிலும் மேற்படி அனுமதிக்கு மாறாக உள்ள அடுக்குமாடி குடியிருப்பை அகற்ற உத்தரவிடுமாறும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலர் தமது 22.05.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கன்னந்தேரி அஞ்சல், பொந்தனூர் காட்டுவளவு திரு. குப்பகவுண்டர் மகன் வடிவேலு என்பவரால் சங்ககிரி பேரூராட்சி வார்டு எண் 2 பால்பாவி தெரு புல எண் 237/3L/1A9A1 இல் உள்ள இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் கட்டிட விதிமுறைகளுக்கு முரணாக கட்டப்பட்டுள்ளதாக 10.09.2022 அன்று புகார் அளித்ததன்படி, 7.10.2022 நாளிட்ட இவ்வலுவலக அறிவிப்பின்படி மேற்படி கட்டிடத்தின் அப்போதைய உரிமையாளர் திரு. செ. பூபாலன் என்பவருக்கு மேற்படி கட்டிடத்தினை திருமணம் மற்றும் விஷேச நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தக்கூடாது என்றும், அனுமதியின்றி இயங்கி வரும் கட்டிடத்தினை கட்டிட விதிகளின்படி ஏன் மேல்நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கு விளக்கம் அளிக்ககோரி அறிவிப்பு வழங்கப்பட்டது. அதனையடுத்து திரு. செ.பூபாலன் மேற்படி கட்டிடத்தினை சொந்த பயன்பாட்டை தவிர வேறு யாருக்கும் வாடகைக்கு விடுவதில்லை என தெரிவித்து கடிதம் அளித்துள்ளார் என்றும் அதனையடுத்து மனுதாரரின் 21.11.2022 நாளிட்ட புகார் மனுவில் மேற்படி கட்டிடத்தினை திரு. செ.பூபாலன் என்பவர் திருமதி C. ஹேமலதா என்பவருக்கு தானமாக அளித்துவிட்டார் எனவும், அதே கட்டிடத்தில் தொடர்ந்து திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாகவும் புகார் அளித்ததையடுத்து 24.11.2022 நாளிட்ட இவ்வலுவலக அறிவிப்பின்படி அதன் தற்போதைய உரிமையாளர் திருமதி C. ஹேமலதா என்பவருக்கு மேற்படி கட்டிடத்தினை திருமணம் மற்றும் விஷேச நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தக் கூடாது என்றும் அனுமதியின்றி இயங்கி வரும் கட்டிடத்தினை கட்டிட விதிகளின்படி ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் திருமதி C. ஹேமலதா என்பவர் இப்பேரூராட்சியின் அறிவிப்பினையடுத்து மேற்படி கட்டிடத்தில் திருமண விஷேச நிகழ்ச்சிகளுக்கு யாருக்கும் வாடகைக்கு விடுவதில்லை என்றும் திரு. கே. வடிவேலு என்பவருக்கும் தன் தந்தையாருக்கு உள்ள தனிப்பட்ட பகையினால் தவறான புகார் கொடுத்துள்ளார் என்றும், அதன் தொடர்பாக சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து முதல் தகவல் அறிக்கை (FIR) நகலினை கடிதத்துடன் இணைத்து அனுப்பியுள்ளார்.

எனினும் திரு. கே. வடிவேலு என்பவரால் அளிக்கப்பட்ட புகார் மனுவின் பேரில் மேற்படி கட்டிடத்தின் தற்போதைய உரிமையாளரான திருமதி . C. ஹேமலதா என்பவருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு அனுமதியற்ற பகுதிகளை அகற்றும் விதிகள் –2022, விதி 3 இன் படி படிவம் –1 அறிவிப்பு வழங்கப்பட்டு மேற்குறிப்பிட்டுள்ள கட்டிடத்தின் அனுமதி பெறப்பட்ட ஆவணங்களின் நகலினை இப்பேரூராட்சி அலுவலகத்தில் அளிக்க தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து திருமதி C. ஹேமலதா என்பவரால் மேற்படி கட்டிடத்தினை உரிமை பெற்ற பதிவுத்துறை தான செட்டில்மென்ட் பத்திரம் மற்றும் கட்டிடத்திற்கு பேரூராட்சியின் மூலம் வரிவிதிப்பு செய்யப்பட்ட ரசீதுகளை அளித்து விளக்கக் கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மேற்குறிப்பிட்ட சட்ட விதிகள் 4(i)படி படிவம்–2ல் மேற்படி கட்டிடத்தினை 18.05.2023 அன்று சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மூலம் மேற்படி புகார் மனுவில் தெரிவித்துள்ள கட்டிடம்

அதன் தற்போதைய உரிமையாளரான திருமதி C. ஹேமலதா என்பவர் முன்னிலையில் அளவீடு செய்யப்பட்டு கீழ்க்குறிப்பிட்ட விவரங்கள் அறியப்பட்டது.

(i) மேற்படி கட்டிடம் முழுமையாக கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

(ii) மேற்படி கட்டிடத்திற்கு இப்பேரூராட்சியின் கட்டிட உரிம அனுமதி டீ.மூ. எண் 243/2015, நாள் 24.08.2015 இன்படி 1990.63 சதுர அடி தரை மற்றும் 1990.63 சதுர அடி முதல் தளம் ஆகியவற்றிற்கு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சங்ககிரி பேரூராட்சியின் கட்டிட வரைபட அனுமதி டீ.மூ எண் 533/2015 நாள் 12.09.2015இன்படி ஏற்கனவே அனுமதி பெற்ற கட்டிடத்தின் மேல் 1990.63 சதுர அடியில் இரண்டாம் தளம் அமைப்பதற்கு கட்டிட வரைபட அனுமதி பெறப்பட்டுள்ளது. இதில் தரைதளம் வாகன நிறுத்துமிடமாகவும், முதல் தளத்தில் நான்கு வீடுகள், 2ம் தளத்தில் 6 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆனால் நேரடி ஆய்வின்போது தரை தளத்தின் வாகன நிறுத்துமிடத்தில் முகப்பு பகுதியில் 12'6" x 15' என்ற அளவில் கீழ் மற்றும் மேல் என இரு அறைகள் மற்றும் 10'3" x 52 என்ற அளவில் பால்கனி மற்றும் இரு கழிவறைகள் ஆகிய பகுதிகள் வரைபட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது. மேலும் வாகன நிறுத்துமிடம் திறந்தவெளியாக இல்லாமல் முழுமையாக சுவரால் கட்டப்பட்டுள்ளது.

முதல் தளத்தில் நான்கு வீடுகளுக்கு அனுமதி பெறப்பட்டு இருந்த நிலையில் முகப்பு பகுதியின் வீட்டினை அதன் அடுத்த வீட்டுப் பகுதியுடன் இணைத்து கட்டப்பட்டுள்ளது. முகப்பு பகுதியில் அனுமதிக்கு மாறாக நான்கு அடி அளவில் கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இரண்டாம் தளத்தில் ஆறு வீடுகள் கட்டப்பட்டுள்ளது. கட்டிடத்தின் உட்பகுதியில் அனுமதிக்கு மாறாகவும் முகப்பு கட்டிடம் 4 அடி அளவில் கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ளது.

மூன்றாம் தளத்தில் முகப்பு பகுதியில் படிக்கட்டின் அருகாமையில் 602 சதுர அடியிலும், கட்டிடத்தின் பின்பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின்கீழ் 435 சதுர அடியிலும் இரு கட்டிடங்கள் இப்பேரூராட்சியின் கட்டிட வரைபட அனுமதி ஏதும் பெறாமல் கட்டப்பட்டுள்ளது.

(iii) கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதற்கு முடிவு சான்றிதழ் ஏதும் இப்பேரூராட்சியின் மூலம் வழங்கப்படவில்லை.

(iv) கட்டிடத்தின் வாகன நிறுத்துமிடமான தரை தளத்திற்கு ஒரு வரி விதிப்பும் முதல் தளத்தில் உள்ள மூன்று வீடுகளுக்கு மூன்று (3) வரிவிதிப்பும் இரண்டாம் தளத்தில் உள்ள ஆறு வீடுகளுக்கு ஆறு (6) வரிவிதிப்பும், மூன்றாம் தளத்தில் உள்ள இரண்டு வீடுகளுக்கு இரண்டு(2) வரி விதிப்பும் ஆக மொத்தம் (12) பன்னிரண்டு வரி விதிப்புகள் செய்யப்பட்டுள்ளது.'

(v) மேற்படி கட்டிடத்திற்கு ஆழ்குழாய் கிணறு மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும் மின்சார வசதி பெறப்பட்டுள்ளது.

எனவே இப்பேரூராட்சியின் வரைபட அனுமதிக்கு மாறாக தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள பகுதிகளை கட்டிட அனுமதியில் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றம் செய்திடவும், மூன்றாம் தளத்தில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள இரு கட்டிடத்தினை அப்புறபடுத்திட தெரிவித்தும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு அனுமதியற்ற பகுதிகளை அகற்றும் விதிகள்–2022, விதி 5பி இன்படி 19.05.2023 நாளிட்ட இவ்வலுவலக அறிவிப்பின்படி படிவம் 4இல் மேற்படி கட்டிடத்தின் தற்போதைய உரிமையாளர் திருமதி C. ஹேமலதா என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி கட்டிடத்தில் வாடகைக்கு குடியிருப்பவர்களை அப்புறபடுத்தி பயன்பாட்டினை தவிர்க்கும் பொருட்டு 60 நாட்கள் அவகாசம் அளித்தும், கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை மாற்றியமைக்கும் பொருட்டு 90 நாட்கள் அவகாசம் வழங்கியும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், திரு. கே. வடிவேலு என்பவரால் அளிக்கப்பட்ட புகார் மனுவின்படி கட்டிடத்தில் வாகன நிறுத்துமிடத்தில் உணவகம் செயல்பட்டு வந்ததையும் மற்றும் சிறிய விஷேச நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்ததையும் இப்பேரூராட்சியின் மூலம் அறிவிப்பு வழங்கி எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலமாக தற்போது முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்டவாறு கட்டிட அனுமதிக்கு முரணாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை மாற்றி அமைக்கவும், அனுமதியின்றி கட்டிய கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பொருட்டும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு அனுமதியற்ற பகுதிகளை அகற்றும் விதிகள் –2022, விதி 5பி–இன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் அவ்வாறு செய்ய தவறும்பட்சத்தில் மேற்கண்ட விதிகள் விதி 7இன்படி கட்டிடத்தினை பூட்டி சீல் வைத்து மேல்நடவடிக்கை தொடரப்படும் என்பதையும் இதன் மூலம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

(4) மனுதாரருக்கும், சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலருக்கும் 21.06.2023 அன்று இம்முறை மன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.06.2023 தேதியிட்ட இம்முறைமன்ற அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(5) மனுதாரர் திரு.K. வடிவேல் 21.06.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நவப்பட்டி, ATC Avenue காவேரி கிராஸ் கதவு எண்1/3–174ல் உள்ள திரு. பூபாலன் என்பவருக்கு சொந்தமான அடுக்குமாடி வீட்டிற்கு உரிய அனுமதி பெறப்படவில்லை. மேற்கண்ட வீட்டின் கீழ் பகுதியில் பேரூராட்சியின் அனுமதி எதையும் பெறாமல் மினி திருமண மகாலாக மாற்றம் செய்து வாடகைக்கு விட்டுள்ளார். மேலும் தரை தளத்தில் மெஸ் என் பெயரில் உணவகம் நடத்தி வருகிறார். உரிய அனுமதி பெறாமலும், பேரூராட்சி வரி எதையும் செலுத்தாமலும் மேற்கண்ட மெஸ் நடைபெற்றுவருகிறது என தெரிவித்து, மேற்கண்ட அனுமதியற்ற அடுக்குமாடி கட்டடத்தின்மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், மேலும் எவ்வித அனுமதியின்றி

நடத்தப்படும் மினி திருமண மண்டபம் மற்றும் மெஸ் ஆகியவற்றின் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்திட இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

(6) எதிர்மனுதாரான சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலர் 21.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள திரு. செ. பூபாலன் என்பவருக்கு சொந்தமான தனது வீட்டை அவரது மகள் திருமதி சி. ஹேமலதா என்பவருக்கு தானமாக வழங்கப்பட்டிருந்த சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நவப்பட்டி, ATC Avenue காவேரி கிராஸ் கதவு எண் 1/3–174ல் அமைந்துள்ள இடத்தில் திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாகவும் புகார் பெறப்பட்டதையடுத்து பேரூராட்சியால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அங்கு திருமண மண்டபம் ஏதும் இல்லை. கிருஷ்ணா என்கின்ற பெயரில் மெஸ் மட்டுமே நடைபெற்று வந்தது. வரைபட அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட வீட்டிற்கு 24.11.2022 அன்று Show Cause Notice மற்றும் பேரூராட்சி அறிவிப்பு நாள் 19.5.2023ன்படி Calling for plan approval தாக்கீதும் அனுப்பப்பட்டுள்ளது எனவும் Lock and Seal Notice விரைவில் அளிக்கப்படும் என்ற என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அங்கிருந்த குடியிருப்புகள் மற்றும் மெஸ் ஆகியவை காலி செய்யப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், சங்ககிரி தேர்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

சேலம் மாவட்டம், சங்ககிரி பேரூராட்சி, வார்டு எண்.2, பால்பாவி தெரு புல எண்.237/3L/1A9A1-ல் கட்டப்பட்டுள்ள கட்டிடம் கட்டிட விதிமுறைகள் மற்றும் கட்டிட வரைபட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது மற்றும் குடியிருப்பு நோக்கத்திற்காக அனுமதிபெற்று, தற்போது வியாபார நோக்கத்தில் சிற்றுண்டி விடுதி மற்றும் திருமண மஹால் நடத்தி வருவதைக் குறிப்பிட்டு, உரிய நடவடிக்கை எடுத்து, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பை அகற்ற வேண்டுமென மனுதாரர் திரு. கே. வடிவேலு என்பவர் புகார் அளித்துள்ளார். இந்நேர்வில் மனுதாரர் தன் பக்கத்து வீட்டில் குடியிருந்து வருபவர்களிடம் உள்ள வன்மம் காரணமாக புகார் மனு அனுப்பியுள்ளதாக இம்முறைமன்ற விசாரணையில் அறிய முடிகிறது.

மனுதாரரின் 10.09.2022 நாளிட்ட புகார் தொடர்பாக, சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலரின் 7.10.2022 நாளிட்ட அறிவிப்பு மேற்படி கட்டடத்தின் அப்போதைய உரிமையாளருக்கு வழங்கப்பட்டு, கட்டிடத்தினை சொந்த பயன்பாட்டைத் தவிர வேறு நிகழ்ச்சிகளுக்கு வாடகைக்கு விடுவதில்லை என எழுத்துமூலம் கடிதம் பெறப்பட்டுள்ளது.

அதனையடுத்து மனுதாரரின் 21.11.2022 நாளிட்ட புகார் மனுவை ஆய்வு செய்து சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலரின் 24.11.2022 நாளிட்ட அறிவிப்பின்படி மேற்படி கட்டிடத்தின் தற்போதைய உரிமையாளர் திருமதி. சி. ஹேமலதா என்பவருக்கு மேற்படி கட்டிடத்தினை திருமணம் மற்றும் விஷேச நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தக்கூடாது; மற்றும் அனுமதியின்றி இயங்கிவரும் கட்டிடத்தினை கட்டிட விதிகளின்படி ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என எச்சரிக்கை வழங்கப்பட்டு, மேற்படி கட்டிடத்தினை திருமண விஷேச நிகழ்ச்சிகளுக்கு யாருக்கும் வாடகைக்கு விடுவதில்லை என கட்டிட உரிமையாளரின் 1.12.2022 நாளிட்ட கடிதம் பெறப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு அனுமதியற்ற பகுதிகளை அகற்றும் விதிகள், 2022, விதி 3-ன்படி படிவம் -1 அறிவிப்பு வழங்கப்பட்டு கட்டிட அனுமதி ஆவணங்களின் நகலினை வழங்க கட்டிட உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கட்டிடத்தினை உரிமைபெற பதிவுத்துறை தான செட்டில்மெண்ட் பத்திரம் பேரூராட்சி வரிவிதிப்பு ரசீதுகள் ஆகியவை கட்டிட உரிமையாளரிடமிருந்து பெறப்பட்டது.

இதனையடுத்து மேற்குறிப்பிட்ட சட்ட விதிகள் 4 (1)ன்படி படிவம் 2-ல் ஆய்வு அறிவிப்பு வழங்கப்பட்டு, 18.05.2023 அன்று கட்டிட உரிமையாளர் முன்னிலையில் செயல் அலுவலரால் அளவீடு செய்யப்பட்டு, குறைபாடுகள் கண்டறியப்பட்டு அனுமதிக்கு மாறாக தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள பகுதிகளை கட்டிட அனுமதியில் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றம் செய்திடவும், மூன்றாம் தளத்தில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினை அப்புறப்படுத்தவும் குறிப்பிட்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு அனுமதியற்ற பகுதிகளை அகற்றும் விதிகள் 2022, விதி 5 பி-ன்படி 19.05.2023 நாளிட்ட படிவம் - 4 அறிவிப்பு செயல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிட வாகன நிறுத்துமிடத்தில் உணவகம் செயல்பட்டு வந்தது மற்றும் சிறிய விஷேச நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்ததும் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மேற்படி நேர்வில் தொடர் நடவடிக்கை சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலரால் உடனுக்குடன் எடுக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. ஆனால் மேற்படி அறிவிப்பில் கட்டிடத்தில் குடியிருப்பவர்களை அப்புறப்படுத்தி பயன்பாட்டினை தவிர்க்கும் பொருட்டு விதிகளின்படி அவகாசம் அளிக்காமல், 60 நாட்கள் அவகாசம் அளித்தும் கட்டட அனுமதிக்கு மாறாக கட்டபட்டுள்ள கட்டடங்களை மாற்றியமைக்கும் பொருட்டு 90 நாட்கள் அவகாசம் வழங்கி அறிவிப்பு வழங்கப்பட்டதை விதிகளுக்கு மாறாக செயல்பட்டுள்ள சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலரின் செயலினை இம்முறைமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் கட்டிட அலுவலரின் வரைபட அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட வீட்டிற்கு 24.11.2022 அன்று **Show Cause Notice** மற்றும் பேரூராட்சி அறிவிப்பு நாள் 19.5.2023ன்படி **Calling for plan approval** தாக்கீதும் அனுப்பப்பட்டுள்ளது எனவும் **Lock and Seal Notice** விரைவில் அளிக்கப்படும் என சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலர் 21.6.2023 வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், தமிழ்நாடு நகர் ஊர்மைப்பு அனுமதியற்ற பகுதிகளை அகற்றும் விதிகள் 2022, விதி 7-ன்படி கட்டிடத்தினை தொய்வின்றி பூட்டி சீல் வைத்தல் மற்றும் **De-Occupation**

**and Demolition** தாக்கீது நடவடிக்கைளை உடனடியாக எடுத்து, எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை இம்முறைமன்றத்திற்கு 45 நாட்களுக்குள் அறிக்கையாக சமர்ப்பிக்கவும் சங்ககிரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, ஜூலை 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. K. வடிவேலு,
8/231/1 பொந்தனூர் காட்டுவளவு
கண்ணந்தேரி அஞ்சல்–637102
சங்ககிரி தாலுகா,
சேலம் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
சுங்ககிரி பேரூராட்சி,
சேலம் மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.